**MCOP .No. 71/2018**

**Date : 21.11.2022**

***ம.சா.1 சண்முகராஜ்***

***எ.த.கு.வி***

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கல்வி சான்று எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் பஸ் டிரைவராக பணிபுரிந்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன். நான் கே.எஸ்.ஆர் பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்ததற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ விபத்து தென்காசி=மதுரை பிரதான சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் வந்த பொழுது தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தின்பொழுது எனக்கு பாத்தியப்பட்ட இருசக்கர வாகனத்தில் தான் வந்தேன். நான் வந்த இருசக்கர வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் பஸ்ஸின் வலது பக்கம் தான் எனது இருசக்கர வாகனம் மீது மோதியது. ஆனால் எதிர்மனுதார் பேருந்தின் பம்பரின் வலது புறம் எனது வண்டி இடித்ததா என்று சரியாக தெரியாது. எனது இருசக்கர வாகனத்தின் முன்புறம் முழுவதும் சேதமாகிவிட்டது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னர் எனது இரு சக்கர வாகனம் எனது மேல் கிடந்தது என்றால் சரிதான். சம்பவத்தின்பொழுது எதிர்மனுதாரின் பேருந்து தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். நான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனது முன்னே சென்ற லாரியை முந்தி சென்ற பொழுது நான் வேகமாக வருவதை எதிர்மனுதார் ஓட்டுநர் பார்த்து அவரது பேருந்தை நிறுத்திவிட்டார் என்றாலும், நானாக தான் தவறான திசையில் சென்று பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது அதி வேகம் மற்றும் அஜாக்கிரதையால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதார் பேருந்தானது வேறு ஒரு வாகனத்தினை முந்தி செல்லும்போது தவறான பாதையில் எனக்கு எதிரே வந்து மோதி விபத்து

ஏற்படுத்தினார். எதிர்மனுதார் பேருந்து அதிவேகமாக தவறான திசையில் வருவதை பார்த்து நான் ஓரமாக செல்ல முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே ஓரமாக தான் சென்று கொண்டிருந்தேன். மனுவில் கண்டவாறு சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது தற்கவனத்தினை மறைக்கும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதிவேகமாக வந்து விபத்து ஏற்படுத்தியதால் தான் எனது வாகனத்திற்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது ஆறிவிட்டது என்றால் சரிதான். மனுவில் கூறியுள்ள வாறு நான் ஓட்டுநராக பணி எதுவும் செய்யவில்லை என்றாலும், அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் விபத்து ஏற்படுத்தியுள்ளதால் எதிர்மனுதார் இழப்பீடு எதுவும் வழங்க கடமைப்பட்டவர் கிடையாது என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**